காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 வைகாசி 5 (19-5-74) | இதழ்: 44

★

உள்ளே......

படமும் பாடமும் (2)
(அறிஞர் அண்ணா)

★

மனையறம் போற்றும் மாண்பு
(இலக்கியம்)

★

அண்ணா பாவை
(கவிதை)

★

பிராயச்சித்தம்
(சிறுகதை)

★

அணைக்க வரவா?

கவிஞர் மணிவேந்தன்

கட்டுக் குலைந்திடாத பட்டுத் தளிருடலைத்
தொட்டுத் தழுவ வரவா?—தேன்
சொட்டும் இதழ்விரிக்க சிட்டுக் குருவியே! நான்
கிட்டே நெருங்கி வரவா?

கொல்லும் கருவிழியே! முல்லை இதழ்சுவைக்க
மெல்ல நடந்து வரவா?—எனை
வெல்லும் பருவஎழில் சொல்லும் அமுதமொழி
செல்லக் கிளியே! வரவா?

உள்ளங் கவர்ந்தவளே! கிள்ளைக் கனிஇதழை
மெள்ளச் சுவைக்க வரவா?—உன்
துள்ளும் பருவமெனும் கள்ளைக் களிப்புடனே
அள்ளிப் பருக வரவா?

கொஞ்சுங் கனிமொழியே! பஞ்சு மலருடலே!
கொஞ்சிக் களிக்க வரவா?—உன்
பிஞ்சாம் உடல்தழுவி நெஞ்சம் மகிழ்ந்திடவே
வஞ்சிக் கொடியே! வரவா?

அன்ன நடையுடனே என்னை மயக்கும்எழில்
பெண்ணே! அணைக்க வரவா?—உன்
கன்ன நறுங்கனியைத் தின்ன விரும்புகிறேன்
பொன்னே! எழுந்து வரவா?.

★

விலை: 0-25 காசு

அண்ணா பாவை

பாவலர் மணிவேலன், எம்.ஏ.,

காஞ்சித்திருமணியைக் கற்பூரச் சொற்கோவைத்
தீஞ்சொற் பொழிமுகிலைத் தேன்பிலிற்றும் தூமலரைப்
பூஞ்சை யுடலோரும் பொக்கென் றெழுந்தணியாய்த்
தாஞ்சாவை ஏற்றுத் தமிழ்காக்கச் செய்தவனை
ஊஞ்சல் உளத்தார் உரம்பெற்று நின்றிடவே
பூஞ்சிட்டுப் போல்பறந்து பொன்மொழிகள் வார்த்தவனைத்
தேஞ்சொல் பொழிவாயாய்! தூக்கம் விடுத்தெழுந்து
வாஞ்சை யுடன்பாடி வாழ்த்தேலோர் எம்பாவாய்!

குட்டக்குட் டக்குனிந்தே கூனி இருந்தவரைத்
தட்டி நிமிர்த்தித் தடவரைபோல் நின்றிடவும்
வட்டில் உணவுக்காய் வாய்பிளந்து நின்றவரும்
பொட்டென் றெழுந்திருந்தே புத்துணர்ச்சி கொண்டிடவும்
பெட்டிக்குள் பாம்பாய்ப் புரண்டுயிர்த்த நந்தமிழர்
பட்டென்று கொத்தப் படமெடுத்து நின்றிடவும்
மட்டில் பணிபுரிந்த மாமணியைப் பாடுதற்குக்
கட்டில் விடுத்தெழுந்தே கண்மலராய் எம்பாவாய்!

இலக்கியத் தாமரைகள் எங்கும் மலர்ந்திருக்க
அலைக்கைகள் தாலாட்டும் ஆர்ந்த தமிழ்க் குளத்தைக்
கலக்கிச்சே றாக்கிக் கமழ்மலரை மேயவந்து
மலுக்கென்று வீழ்ந்திட்ட மாஇந்திக் காரெருமைத்
தலைக் கொம்பைப் பற்றித் தரதரென ஈர்த்து வந்தே
உலக்கையாம் சட்டத்தால் ஓங்கி யறைந்தகற்றி
நிலைக்கும் புகழ்கண்ட நேர்மைத் தலைமகனின்
சிலைக்கு விழாவெடுப்போம்! தாள்திறவாய் எம்பாவாய்!

கூழைப் பழஞ்சோற்றைக் கொள்ளுமட்டும் உண்பதற்கும்
ஏழைக்கு வாழ்வில்லை என்னும் நிலை கண்டே
'ஊழை'ப் பெருவலியை ஓர்நொடியில் மாற்றிவிடப்
பாழுக் குழையாது பாருக் குழைத்தவனை,
ஆழக் கடலருகே ஆர்க்கும் அலைக்கைகள்
சூழத்தா லாட்டத் துயில்கொள்ளும் அண்ணாவைத்
தாழைத் திறந்து தவள நகையுடையாய்
வாழத் தமிழ்பாடி வாழ்த்தேலோர் எம்பாவாய்!

பற்றி எரியும் பழங்குடிசை வாழ்வோர்கள்
சுற்றி அழுதநிலை செம்மனத்தான் நெஞ்சத்தை
எற்றி அலைக்கழிக்க என்செய்வேன் என்றெண்ணி
உற்ற வழியறிந்தே ஒள்ளெரியில் வேகாத
பற்றிடத்தைத் தந்த பணியாளன் தன்பெருமை
சுற்றிச் சுழன்று சுடர்கொடியே! பாடுதுமே!
எற்றுக்கு நீயின்னும் இன்துயிலில் ஆழ்ந்திட்டாய்?
கற்றோன் புகழ்பாடக் கண்மலராய் எம்பாவாய்!

கட்டும் பெருமனையும் கைநிறைய பொன்மணியும்
பட்டும் பொருட்குவையும் பாரில் ஒருசிலரே
தட்டிக்கொண் டேவாழும் தாழ்வை உடன்நீக்கி
ஒட்டும் வயிறுடையார் உள்ளத் துயர்துடைக்கத்
திட்டங்கள் தீட்டிச் செழுமை வளர்ப்பதற்குச்
சட்டங்கள் செய்தும் தனித்துப் பணிபுரிந்தும்
நட்ட பெரும்பயனை நாம்துய்க்க வைத்தவனைக்
கட்டித் தமிழ்பாடிக் கைதொழுவோம் எம்பாவாய்!

விண்ணிலவாய் வந்திங்கு வீங்கிருள் சீய்த்தவனைப்
பண்ணாக நம் செவியில் பாய்ச்சி நலம்விளைத்த
அண்ணாவை, மூதறிவை, ஆற்றல் தலைமகனை,
எண்ணக் களஞ்சியத்தை, ஏட்டின் இலக்கியத்தை,
வண்ண எழுத்துலகின் மன்னவர்க்கு மன்னவனை,
உண்ணெகிழத் 'தம்பீ!' யென் றோயா தழைத்தழைத்தே
எண்ணத்தில் வாழும் இணையற்ற மூத்தவனை
அண்ணாந்து பாட அடீ! வாராய் எம்பாவாய்!

தம்பிக்கு மடல்



தம்பி!

வீரர் இருவர் குறித்த எடுத்துக் காட்டினைத் தொடர்ந்து கற்பனை செய்து பார், தம்பி! வென்றவன், வீழ்ந்தவனுடைய வீச்சுத் திறமையை வியந்துகொண்டிருக்கும் வேளையில், வேறோர் ஆசாமி அங்கு வந்து, கெக்கலி செய்தபடி "வீழ்ந்தாயா, வீழ்ந்தாயா! வேண்டும்! வேண்டும்! தலைவேறு உடல் வேறு ஆகியிருக்க வேண்டும், ஏதோ தப்பித்துக் கொண்டாய்! வாட்போர் ஒரு கேடா உனக்கு!" என்று கேலி பேச, "ஐயா! யாரோ நீவிர்" என்று வீழ்த்தப்பட்ட வீரன் கேட்கும்போது, "தெரியவில்லையா பயலே! நான்தான் உன்னை வீழ்த்திய வீரன் கை வாளுக்குத் தைலம் பூசியவன்! இப்போது தெரிந்துகொள், நீ, யாரால் தோற்கடிக்கப் பட்டாய் என்பதை" என்று கூறினால், வென்றவன், வீழ்த்தப்பட்டவன் எனும் இரு வீரருமேயன்றோ, கை கொட்டிச் சிரித்தபடி, 'பலே! பலே! வீரதீர கெம்பீரச் சிங்கமே! வாழ்க! வாழ்க!" என்று கூறுவர்.

அதுபோலத்தான், 150 இடங்களைப் பிடித்த காங்கிரஸ், 15 இடங்களை மட்டுமே பெறமுடிந்த, நம்மிடம் வாள் வீச்சுத் திறமை வகையாக இருக்கிறதே என்றெண்ணி வியந்து கொண்டிருக்கும் வேளையில், காங்கிரசுக்குத் தேர்தல் களத்திலே வாளுக்குத் தைலம் பூசிக்கொடுக்கும் திருப்பணியாற்றியவர்கள், "வீழ்ந்தாயா! வீழ்ந்தாயா! என்று நம்மை நோக்கி நையாண்டி செய்கிறார்கள். காங்கிரசும், இந்தக் 'கேலி கூத்து' கண்டு கைகொட்டித் தான் சிரிக்கிறது! நாம் அதுகூடச் செய்வது, நேரக்கேடு என்று கருதி, 150-இடங்களைக் காங்கிரசினால் எப்படிப் பெற முடிந்தது, நாம் ஏன் 15 இடங்களை மட்டுமே பெற்றோம், நமது முறையிலே என்ன கோளாறு இருக்கிறது, என்பதைக் கண்டறிந்து, எதிர்காலத்துக்கான காரியத்தை உருவாக்குவதிலே ஈடுபடுகிறோம்.

150 இடங்களிலே வெற்றி பெற்ற காங்கிரசுக்கு நிச்சயமாகத் தெரியும் பதினைந்தே இடங்களைப் பெற்ற நமது கழகம், எந்த அளவுக்குத் தேர்தல் களத்திலே திறமையைக் காட்ட முடிந்தது, என்ற உண்மை; இடையே இருந்தவர்கள் யாதறிவர் பாபம்! அவர்கள் அறிந்ததெல்லாம், ஆத்திரம் தீரத் திட்டித் தீர்த்தோம்! ஆபாச அகராதியை ஒப்புவித்துக் காட்டினோம்! அதுவும் மற்றவர் செலவில்!! என்பதுதான்-வேறு என்ன! காங்கிரஸ் அபேட்சகர்களுக்கல்லவா தெரியும், பட்ட கஷ்டம், கொட்டிய பணம்; கால்கடுக்கச் சுற்றியவர்களுக்குத் தானே எரிச்சல் தெரியும்—கையும் மனமும் வலிக்க வலிக்கப் பணத்தைக் கரைத்தவர்களுக்குத்தானே அதன் கஷ்ட நஷ்டம் தெரியும்—இடையே இருந்தவர்களுக்கு என்ன! வாய் வலிக்க நம்மைத் திட்டினார்கள், அவ்வளவுதானே! இதில் என்ன கஷ்டம் அவர்களுக்கு! வழக்கமாகச் செய்துகொண்டு வருகிற காரியம்—அது தவிர வேறு எந்தக் காரியத்திலும் அவர்களுக்கு நாட்டமே செல்ல முடியாத அளவுக்கு அந்த ஒரு காரியத்தில் ஈடு எதிர்ப்பற்ற திறமை பெற்றல்லவா விளங்குகிறார்கள்!!

காங்கிரஸ் கட்சி நாம் 15 இடங்களில் மட்டும் தானே வெற்றி பெற்றோம், என்று

படமும் பாடமும் (2)

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

		மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்	...	ரூ. 5	ரூ. 355
		ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு	...	ரூ. 5	ரூ. 337.50
		ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

கேவலமாகக் கருதவுமில்லை; அலட்சியமாக இருந்து விடவுமில்லை; மாறாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்; தோல்வி ஏற்பட்ட காரணங்கள் குறித்து விளக்கம் கேட்கிறார்கள். தம்பி! காஞ்சிபுரம் தொகுதியில், காங்கிரஸ் தோற்றதன் காரணத்தைக் கண்டறிந்து, நிலைமையைச்சரிப்படுத்துவதற்காகவே அமைச்சர் ஒருவர் தமது அலாதியான அறிவாற்றலைச் செலவிட்டிருக்கிறார்!!

திராவிட முன்னேற்றக் கழகத்தை நாங்கள் குறைத்து மதிப்பிட்டு விட்டோம், அதனால்தான் எங்களுக்கு இவ்வளவு தொல்லையும் தோல்வியும் வந்தன, என்று கம்யூனிஸ்டு வட்டாரம் கருதுவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று பார்த்தேன்.

பிரஜா-சோஷியலிஸ்டு கட்சியின் தலைவரும் என் நண்பருமான சின்னதுரை, திராவிட முன்னேற்றக் கழகம் 'கூட்டாக' இருந்து தேர்தலில் ஒரு அணி ஏற்படுத்தாது போனதனால்தான், காங்கிரஸ் இத்தனை இடங்களைப் பிடித்துக்கொண்டது என்று கூறுகிறார்.

சோஷியலிஸ்டு வட்டாரத்திலும், இது போன்றே கருதப்படுவதாக அறிகிறேன்.

தேர்தல் களத்திலே ஈடுபட்ட ஒவ்வொரு கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி 15 இடங்களிலேதானே, என்று அலட்சியம் காட்டவில்லை; ஆராய்கிறார்கள்; மேற்கொண்டு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பேசுகிறார்கள்; தைலம் தடவியவர்கள் மட்டும் தான், கேலிபேசுகிறார்கள், 15 இடங்கள் தானே என்கிறார்கள், புலியுடன் போரிட்டு, உடலெங்கும் புண்ணாகிக் கிடக்கும் வீரனை, பாராட்டுவர், கேலி பேசமாட்டார்கள். அஃதேபோல, இன்றளவு வரையில் 'இந்தியாவிலே' ஏகசக்ராதிபத்யம் செய்வதற்கான கட்சி என்று புகழப்பட்டு வரும் காங்கிரசைத் துணிந்து எதிர்த்து நின்று, பதினைந்து இடங்களில் வெற்றி பெற்ற நமது கழகத்தைக் கேலி பேசுகின்றனர்—பேசுபவர்கள், எங்கள் ஆற்றலைக் காணீர்! நாங்கள் காங்கிரஸ் கட்சியை ஓட ஓட விரட்டி அடித்தோம், எல்லா இடங்களிலும் வெற்றிக் கொடி நாட்டினோம், என்று பட்டியல் காட்டுகிறார்களா, என்றால், அது தான் இல்லை! போகட்டும், பாவம், நம்மைக் கேலி செய்வதன் மூலம், தமக்கோர் "தெம்பு" தேடிக் கொள்கிறார்கள்.

தம்பி! பதினைந்து இடங்களிலே மட்டுமே வெற்றி பெற்றோம்; இது நமக்கு ஏமாற்றத்தைத் தரத்தான் செய்கிறது; எனக்கோ பெரியதோர் ஏமாற்றத்தைத் தருகிறது. போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்றுவிடுவோம் என்று நான் எண்ணி ஏமாற்றம் அடையவில்லை, நான் குறைந்தது 80 இடங்கள் மட்டிலுமாவது கிடைக்கும் என்று கணக்கிட்டிருந்தேன், பதினைந்து தான் கிடைத்தது. இது எனக்கு வேதனை தரத்தான் செய்கிறது. இந்த வேதனை எனக்கு எப்போது குறைகிறது என்றாலோ இதற்கும் வக்கற்றுப்போய், இரு கொடி ஏந்திகளாகி, அழையாமலே நுழைந்து கொண்டு, தேர்தல் முரசாகப் பயன்பட்டவர்கள், பதினைந்துதானா! பதினைந்தே பதினைந்துதானா என்று பரிகாசம் பேசுகிறார்களே, அப்போதுதான் குறைகிறது! இப்படியும் சில விசித்திர சித்தர்கள் இருக்கிறார்களே என்பதைக் காணும்போது, எனக்கு வேதனை மறைகிறது, வேடிக்கையாக இருக்கிறது

தம்பி! பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து பதவியில் இருந்தும், பல பல கொடுமைகளை இழைத்தும் இந்த முறையும் நாட்டு மக்கள், காங்கிரசு கட்சியையே 'ஆளவந்தார்'களாக்கி விட்டனர். மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை, இது குறித்து வியந்து பாராட்டி எழுதுகிறது, கார்டியன் வியப்புடன் இதனைப் பாராட்டுவதற்குக் காரணம், ஜனநாயகத்திலே பண்பட்ட பிரிட்டன் போன்ற நாடுகளிலே, மக்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்கிறார்கள். ஆளும் கட்சி, அறிவீனத்தாலோ, அகந்தையாலோ, அலட்சியத்தினாலோ, மக்கள் நலனுக்கு ஊறு நேரிடும் காரியம் செய்து விட்டால், மக்கள் சீறி எழுந்து ஆளும் பொறுப்பை மீண்டும் அந்தக் கட்சியிடம் தர மறுக்கிறார்கள், இங்கோ காங்கிரஸ் கட்சி ஆயிரத்தெட்டு தவறுகளைப் புரிந்தும், பொறுப்பு மிக்க தலைவர்களும், பொறுப்புள்ள பத்திரிகைகளும் அத்தவறுகளைக் காட்டி இடித்துரைத்தும், ஓட்டுகளை மட்டும் காங்கிரசு கட்சியினால் தட்டிப் பறிக்க முடிகிறது! இதுதான், மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகைக்கு வியப்பாக இருக்கிறது. இது ஒருபுறம் இருக்கட்டும்; நான் கூறவந்தது தம்பி! இப்படி மக்களிடம் ஓட்டுகளைத் தட்டிப் பறிக்கும் 'மகத்துவத்தை' இன்றும் குன்றாமல் பெற்றிருக்கும் ஒரு பலம் பொருந்திய கட்சியுடன் போட்டியிட்டு நாம் பதினைந்து இடங்களைப் பெற்றோம்; அதனை, காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பு எனும் சூறாவளியில் சிக்கினால் புயலிற்பட்ட கலமாவோம் என்று அஞ்சி ஒதுங்கிக் கொண்டவர்களும்; அடிபணிந்து அக்காரவடிசல் பெற்றவர்களும், கேலியாகப் பேசிக் கொண்டு போகட்டும்; தங்கள் இயலாமையை இதன் மூலம் காட்டிக் கொள்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சிக்கு இன்றளவும் பத்திரிகை பலம், பிறர் கண்டு வியந்திடத் தக்க அளவு இருந்திடக் காண்கிறோம்.

முதலாளிகள், தங்கள் இலாப வேட்டைக்கு வாய்ப்பும் வசதியும் பெற காங்கிரசை ஆதரிக்க வேண்டும் என்ற தத்துவத்தைப் பொன்னெனப் போற்றி வருகிறார்கள்.

டாட்டா போன்றாரின் பணப் பெட்டிகள், காங்கிரசின் ஓட்டுப் பெட்டிகளுக்குத் துணையாக நிற்கின்றன.

இவ்வளவு 'வல்லமை' படைத்த ஒரு கட்சியை, தோள் வலியும் வாள் வலிவும் படைத்த ஓர் தூர்த்தனை, தொலைவிலிருந்து 'கவண்கல்' வீசியே வீழ்த்த முற்பட்ட அஞ்சா நெஞ்சனைப்போல், வசதியற்ற நிலையையும் மறந்து, நாம் எதிர்த்து நின்றோம். எமது கோபப் பார்வை போதும் இவர்களைச் சுட்டுச் சாம்பலாக்க என்று கொக்கரித்தனர்; கலங்கினோமில்லை; தேர்தலில் ஈடுபடுவது ஜனநாயகக் கடமை, வெற்றி பெற்றே தீரவேண்டும் என்று ஒன்றும் இல்லை. கூடுமானவரையில், முடிந்த அளவு பலமான எதிர்ப்பினை உருவாக்கிக் காட்டப் போகிறோம் என்று கூறிவிட்டு களத்தில் இறங்கி, கடமையைச் செய்தோம், 15 இடங்களில் வெற்றி கிடைத்தது. மற்றவர்கள் கண்டு, புகழ்ந்திட, வியந்திட வேண்டிய சம்பவமே தவிர, கேலி பேசும் சம்பவமாகுமா இது!!

பதினைந்து இடங்கள்தான் பெற்றோம். ஆனால், மொத்தமாக நமக்குக் கிடைத்துள்ள ஓட்டுகள், சாமான்யமல்லவே! கட்சி என்ற முறையில், காங்கிரசுக்கு அடுத்தபடியாக சென்னை ராஜ்யத்தில் தி. மு. கழகமே ஓட்டுகள்' பெற்றிருக்கிறது என்பதை, வியந்தே பல இதழ்கள் எழுதியுள்ளன.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பழமொழி போலல்லவா இது இருக்கிறது, இடங்கள் அதிகம் கிடைக்காவிட்டாலும் ஓட்டுகள் ஏராளம் கிடைத்தன என்று விண்ணாரம்' பேசுவது என்று, சிலர் கூறக்கூடும்,

[வளரும்]

இலக்கியம்

மனையறம் போற்றும் மாண்பு

அவளுக்கும் அவனுக்கும் திருமணம் நடந்தேறுகிறது; இன்பத்துறையில் இறுமாந்திருக்கின்றனர்! கவர்ச்சிகரமான வாழ்வு! எனவே கவலையற்றிருக்கிறார்கள்!

அவர்களது மகிழ்ச்சியைப் பெருக்க, மகன் ஒருவன் பிறக்கிறான். குழந்தையைச் சீராட்டிப், பாராட்டித், தாலாட்டி மகிழ் வெய்துகின்றனர்.

மகனைப் பெற்றெடுத்தால், அவள், உடல் வனப்பும்—வளமும் சற்றுக் குறைந்து காணப்படுகிறாள்; மேலும் தன் அன்பினை மகனுக்கும், மணாளனுக்கும் பகிர்ந்து காட்ட வேண்டிய நிலைமையையும் அடைகிறாள். அவளைப்போலவே, தானும் தன் அன்பைப் பகிர்ந்துகொண்டு, வாழ்க்கையின் நிறையின் பத்தைப் பெறக் கற்றுக்கொள்ளாத அத் தலைவன், அவளால் தான் பெறும் இன்பம் நாளடைவில் குறைந்துவிட்டது என்று எண்ணி, அவன் தன்னை அறியாமலேயே, தனது மனதைப் பிற பெண்களின் மீது அலைய விடுகிறான். தலைவனுடைய மன நிலையை அறிந்துகொண்ட அவனது தோழன் ஒருவன், தலைவனுக்கு வேறுவழியில் இன்பம் தேடித்தர முயலுகிறான். தலைவனுக்கு அமைந்த அத்தோழன் பண்புகெட்டவனாக இருந்ததால் தலைவனைப் பொதுமகளிர் வாழும் பரத்தையர் சேரிக்கு அழைத்துச் செல்ல முயலுகிறான். பரத்தைப் பெண்களின் அழகு முதலியவற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறி, தலைவனைப் பெரிதும் ஊக்குவிக்கிறான். தலைவனும் பரத்தையர் சேரி போக ஒருப் படுகிறான்.

பரத்தையர், கட்டிளங் காளைப்பருவத்தினனான அத்தலைவனின் அழகுத்தோற்றத்தையும், செல்வச் செழிப்பையுங்கண்டு மயங்கி, ஒவ்வொருவரும், தத்தம் காமவலையில் அவனைச் சிக்கவைக்க முயலுகின்றனர். பரத்தையர் காமக்கலையில் சிறந்து, தேர்ந்து விளங்கினராதலால், அவனும் அவர்களோடு கூடி இன்பத்தைப் பெறுவதிலே முனைந்து நின்றான். தோழன் அவனுக்குப் பேருதவியாக இருந்தான். பல மலர்களிலேயும் தங்கித் தேனைக் குடித்துவிட்டுச் செல்லும் வண்டுபோல், அவன் பரத்தையர் சேரியில் ஓயாமல் சுற்றித்திரிந்து கொண்டிருக்கிறான். வீட்டை மறந்து, அன்பு மனைவியை-அருமை மகனை மறந்து, சேரியின்பத்தில் திளைத்துக்கிடக்கிறான் தலைவன்.

தலைவியோ தன் காதலனின் வரவைக் காணாமல் கலங்குகிறாள். பொருள் தேட வேற்றூர் சென்றிருப்பானோ அல்லது மாற்றரசனைத் தோற்கடிக்கப் போர்ப்படை எடுத்துப் போயிருப்பானோ என்று பலவாறாக எண்ணுகிறாள். தன் கணவன் எங்கு சென்றனனோ, அவனுக்கு ஏது நேர்ந்ததோ என்று நினைத்து நினைத்துக் கவலையுறுகின்றாள். மகனோடு கொஞ்சிக் குலாவுவதிலும், வீட்டிற்கு வரும் விருந்தினர்களை வரவேற்று ஓம்புதலிலும் காலங்கழித்து, வருத்தத்தை மறந்து வாழ முயலுகிறாள்; என்றாலும் அவளுடைய உள்ளமும், உடலும் நாளுக்குநாள் வாடியே காணப்படுகின்றன.

அன்றாடம் குழந்தைக்கு அழகுசெய்துவிட்டு, அவன் மழலை மொழிகேட்டு, குறுநடை கண்டு மகிழ்வதிலே நாட்களைக் கழித்து வருகிறாள். ஒருநாள் தலைவனின் தோழன் தெரு வழியே வருகிறான். பரத்தையர் சேரி நோக்கிப் போகும் எண்ணத்துடன். தலைவி தன்னைப் பார்த்துவிடக் கூடாது என்று கருதி, ஒளிந்து மறைந்து, வீட்டிற்குத் தொலைவாக விலகி, அச்சத்துடன் போய்க் கொண்டிருக்கிறான். தலைவனின் நண்பன் போவதைப் பார்த்துவிட்ட தலைவி, அவனை விளித்துக் கூப்பிடுகிறாள். தலைவன் சென்றிருக்கும் இடம் ஒருக்கால் அவனுக்குத் தெரிந்திருக்கக் கூடுமோ என்று எண்ணி, அதனை அறிந்துகொள்ளவே தலைவி அப்பாங்கனை அழைத்தாள்.

"ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று தழதழத்த குரலில் கேட்டுவிட்டு, வீட்டுக்கு அருகாமையில்கூட வர அச்சப்பட்டுக் கொண்டு, தயக்கத்துடன் அங்கே நின்றுவிடுகிறான்.

"ஏனப்பா, உன்னை இப்பொழுதெல்லாம், காணவே முடியவில்லை?"

"ஓய்வு ஒழிவு ஏற்படாததால், இப்பக்கம் வருவதற்கு இயலுவதில்லை!"

மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர்

"எம் மணாளரை எங்கேனும் நீ கண்டனையா? அவர் வீட்டைவிட்டுப் போய் பல நாட்களாகின்றன. இன்னமும் அவர் திரும்பவேயில்லை!"

"அப்படியா?...நான் அவரைப் பார்க்கவே இல்லையே! அவர் எங்கு போய் இருப்பார்?..." என்று தானும் அவளோடு சேர்ந்து வருத்தப்படுவதைப்போல் காட்டிக்கொண்டான்.

"நீ இப்பொழுது எங்கப்பா இருக்கிறாய்?" என்று தலைவி வினவுகிறாள்.

"நாங்கள் இப்பொழுது ஏனாதிப்பாடியில் இருக்கிறோம்" என்று வாய்தவறிச் சொல்லி விடுகிறான். ஏனாதிப்பாடி என்பது ஏனாதிப்பட்டம் பெற்ற படைத்தலைவன் ஒருவன் குடியேற்றிய பரத்தையர் சேரி. அவனது மனம் பரத்தையர் சேரியிலேயே படிந்திருந்ததால் இப்பொழுது இருப்பது பரத்தையர்சேரி என்று தவறிச் சொல்லிவிட்டதோடல்லாமல், "நான்" என்பதற்குப் பதிலாக "நாங்கள்" என்று வாய்குழறிச் சொல்லிவிட்டான்.

தலைவனும் தோழனும் பரத்தையர் சேரியில் சுற்றித் திரிகின்றார்கள் என்பதைக் கேட்டவுடனே, தலைவி திடுக்கிட்டு, "நீ முதலில் பொய் அல்லவா சொன்னாய்?..." என்று வெகுண்டு கேட்டுக்கொண்டிருக்கும்போதே தோழன் அஞ்சி, வெட்கித், தலைகுனிந்து ஓடி விடுகிறான்.

தலைவன் பரத்தையர்களோடு கூடிக் குலாவியிருக்கும் செய்தி அவள் உள்ளத்தை வாட்டுகிறது. மனந்தாளாமல் துயருறுகிறாள். தலைவனின் செய்கையைப் பற்றிப் பிறரிடம் கூறுவதோ, அல்லது தானே பரத்தையர் சேரிக்குச் சென்று அழைத்துவருவதோ தன் நிலைமைக்கு ஏற்ற செயலாகாது என்று கருதுகிறாள். அதனால் வேறுவழி ஏதும் காணாது, கணவனைப் பிரிந்த நிலையில், தன் மன நோய் தீர்க்கும் மருந்து, தன் மகன் தான் என்று எண்ணி, அவனை வளர்த்து வருவதிலே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறாள்.

மகன் மழலைமொழிபேசி, குறுநடை நடக்கும் பருவத்தினனாக இருக்கிறான். அவனுடைய வாய், குறைவொன்றில்லாத பவளம் போல், அழகாக இருக்கின்றது. இன்னதென்று புரிந்துகொள்ளமுடியாத, எழுத்து வடிவு பெறாத மழலைச் சொற்களைப் பேசுகிறான். பேசும்போது, ஒழுகும் எச்சல் நீர், அவன் மார்பிலே கிடக்கும் பொற்சங்கிலியை நனைக்கிறது. நறுமண எண்ணெய் தடவி நீவப்பட்டுத், தலையிலே பூசொருகப் பட்டிருத்தலாலே, அவன் தலையினின்றும் நறுமணம் கமழ்கின்றது. முத்துச்சரங்கள் கோர்த்த, பிறைவடிவமாகப் பொன்னால் செய்யப்பட்ட தலைச்சுட்டி, அவன் நெற்றியில் கிடந்து அசைகிறது அழகிய நிறம் பொதிந்த ஆடை அவன் இடுப்பில் சுற்றி விடப்பட்டிருக்கிறது. அது அவன் நடையை அடிக்கடி தடுத்துத் தடுக்கிவிழச் செய்கிறது. அவன் அடியெடுத்து வைக்கும்போதெல்லாம், காலில் கட்டிய சதங்கை ஒலிக்கிறது. பொன்னால் செய்யப்பட்டு, இரத்தினக் கற்களை உள்ளே கொண்டிருப்பதால், சதங்கைச் சலசலவென ஒலிக்கிறது. அவன் ஓயாமல், தாயிடத்துப் பால் குடிப்பதைக்கூட மறந்து விட்டு, நடைவண்டியை ஓட்டி நடை பழகிக் கொண்டே யிருக்கிறான். சில நேரங்களில், அவன் நீண்ட பொழுது பால்குடிப்பதை மறந்துவிட்டு இருக்கும்போது, தாயினுடைய மார்புகள், பாலாலே விம்மிவிடுவதுண்டு. இப்படி ஓடியாடித் திரிந்து விளையாடும் தன் மகனைப் பார்த்துக்கொண்டிருப்பதிலே தாய்க்குத் தனி இன்பம். ஆலமரத்தின் கீழ் அமர்ந்த இறைவனின் மகன் முருகன் மிக்க அழகுடையவன் என்று பலர் கதைகூற அவள் கேட்டிருக்கிறாளாதலால், அந்தக் கற்பனைக் கடவுளைப் போன்று, தன் மகனும் அழகுவாய்ந்தவன் என்று எண்ணி அடிக்கடி மனம் பூரிப்பாள்.

தாய், ஒருநாள், வேலையற்று ஓய்வாக உட்கார்ந்திருக்கும்போது, தன் மகன் நடைவண்டி உருட்டி விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தன் மகனின் மழலைச் சொற்களைக் கேட்டு இன்புறவேண்டும் என்ற நினைவுடையவளாய், "என்னுயிரே! ஓடிவா" என்று அன்போடு அழைக்கிறாள். மகனும் ஓடிவந்து தாயைக் கட்டி அணைத்துக்கொள்கிறான்.

தாய் அவனை முத்தமிட்டுக் கொஞ்சுகிறாள். நான் பெற்ற பெருமானே! பெருந்தகையே! உன் மழலைச்சொல்லைக் கேட்டு என் மனம் குளிர்ந்து போகுதடா! எங்கே, இன்னும் கொஞ்சம் பேசு! உன் மழலைப் பேச்சு கேட்கக் கேட்க இனிமையாக இருக்கிறதே! அமிழ்தத்தை உண்டாற்போலல்லவா இருக்கிறது! நீ தெருவில் விளையாடும்போது, செவிலித்தாய்மார்கள் நீ திருந்தும்படி கற்றுக்கொடுத்த சொற்களிலே சிலவற்றை, எங்கே கூறு, பார்க்கலாம்!"

என்று அன்போடு கேட்டுக்கொண்டிருக் கிறாள். தலைவி, தன்வீட்டிற்கு விருந்தினர் வரும்போதெல்லாம், அவர்களை வரவேற்று, அவர்களுக்கு உணவு முதலியன ஆக்கவேண் டுவதன் காரணமாகக் கையொழியாமற் வேலை செய்துகொண்டே யிருப்பாள்; அப் பொழுதெல்லாம், செவிலித்தாய்மார்கள், குழந்தையைத் தெருப்பக்கம் எடுத்துக் கொண்டுபோய், விளையாடவிட்டு, பேச்சுக் கொடுத்து அவனை மகிழ்விப்பார்கள்; அவன் தாயைக்கூட நினையாமல், விளையாடுவதி லும், செவிலித்தாயரோடு பேசி மகிழ்வதி லும் திளைத்திருப்பான்; அப்படிச் செவிலித் தாய்மார்கள் சொல்லிக்கொடுத்த சொற் களை, அவன் வாயினின்றும், தானும் கேட்டு மகிழவேண்டி, அவற்றிலே சிலவற்றைச் சொல்லச் சொல்லி கேட்கிறாள். தாய் மக னோடு கொஞ்சுவதைப் பார்த்துக்கொண்டு, தலைவியின் தோழியும், பிற பணிப்பெண் களும் எதிரே நின்றுகொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் தலைவன் மனைவியைக் காண ஆவலோடு வருகிறான். மனைவி மகனோடு கொஞ்சி விளையாடுவதைக் காண்கிறான். அவள் கொஞ்சி விளையாடும் அழகை, நன்கு காணவேண்டி, அவளுக்குத் தெரியாமல், அவளின் பின்பக்கம்போய் நிற்கிறான். தலைவன் மெல்ல வந்து, தலைவிக்குப் பின் புறம் நிற்பதைத் தோழியும் பிறரும் அறிகிறார்கள். தன்னைக் கண்டு தோழியும், பிறரும் வணக்கம் செலுத்த முற்பட்டால், தன்வரவைத் தலைவி அறிந்துகொள்வாள் என்று கருதி, அவர்களை வணக்கம் செய்யா திருக்குமாறு, கையினால் தலைவன் குறிப்பு அறிவிக்கிறான். தோழியும், பிறரும் அவ் வாறே, தலைவன் வந்ததைத், தாங்கள் அறிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ளா மல், அப்படியே நிற்கின்றனர்.

மழலை மொழி பேசும்படி, தாய் கேட் பதற்குப் பதில் சொல்ல வாய் திறக்குமுன், தந்தை தாய்க்குப் பின்னால் வந்து நிற்பதை, மகன் பார்த்துவிடுகிறான். உடனே 'அத்தா! அத்தா!' என்று கூப்பிடுகிறான். தலைவிக்கு ஒன்றும் புரியவில்லை; ஏன் தன் மகன், இப் பொழுது, அத்தா, அத்தா வென்று அவனது தந்தையை அழைக்கிறான் என்பது அவளுக்கு வியப்பையும், வெறுப்பையும் கொடுக்கிறது. ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்து கொண்டு எதிரே நின்றுகொண்டிருக்கும் தோழியைப் பார்த்து, "ஏடி! ஏனதிப்பாடி யிடத்தேச் சுற்றித் திரியும் தலைவரின் செய்கை நினைந்து நினைந்து, வருந்தும் என் மனநோயைத் தீர்க்கக் கூடிய மருந்து, இவன் என்று கருதித்தானே, இவனோடு நான் கொஞ்சி விளையாடுகிறேன்! அப்படி யிருந் தும் இவன் விடாமல் அத்தா, அத்தா என்று அவரையே அழைக்கிறான் பாரடி!" என்று தலைவி சொல்லுகிறாள். ஆனால் மகனோ, "அத்தா! அத்தா!" என்று கூப்பிட்டவண் ணம் தாவுகிறான். அவன் தந்தையை நினைத்துக்கொண்டு அப்படிக் கூப்பிடுகிறான் போலேயிருக்கிறது என்றெண்ணி, அதனைத் தவறு என்று எடுத்துக்கொள்ளாது, தன் தோள்மேல் தாவும் அவனைத் தோளில் தூக்கிக் கொள்கிறாள். அவன் பின்னும் "அத்தா! அத்தா!" என்றே கூப்பிடுகிறான்.

"பாரடி! அவர் பெயரைச் சொல்லக் கூடாது என்று சொல்லியும் அழைக்கிறானடி! அவர் பெயர் இவன் வாயினின்றும் போகாது போலிருக்கிறதே! இதற்கு என்னடி காரணம்?" என்று வினவுகிறாள் தலைவி.

தோழி கையால் குறிப்புக்காட்டி, பின் னால் வந்து தலைவன் நிற்பதை உணர்த்து கிறாள். தோழியின் குறிப்பினாலும், மகன் கூப்பிடுவதைக் கொண்டும் தலைவன், தனக் குப் பின்னால் நிற்பதைத் தலைவி அறிந்து கொள்கிறாள்.

"பகைவரிடத்தே, படைக்கலங்களைத் திருடிக்கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகக் கள்வர் கோட்டைக்குள் நுழைவதைப் போல், இவர் ஒருத்தர் இங்கே வந்திருப்ப தைப் பாரடி! இவர் என்னிடத்திலுள்ள அன்பின் காரணமாக வந்திருப்பாரென்று நீ நினைக்கிறாய்? அப்படி நினைக்காதேடி, நினைக் காதே! என்னைக் கேலி செய்வதற்காகவே, இவர் இங்கே வந்துள்ளார்" என்று தலைவன் காதில் விழும்படி, தலைவி தோழியை நோக் கிக் கூறுகிறாள்.

அதுகேட்ட தலைவன், "ஊரின் மதிற்சுவ ரைக் காக்கும் காவலாளர்கள், கள்வர்களை உள்ளபடியே கண்ணால் காணுமலிருந்தும், அவர்களைக் காணவில்லை என்று சொன்னால், குற்றம் தங்கள்பால் வந்துசேரும் என்று கருதி எப்படிக் கள்வரைக் கண்டோம் என்று பொய் கூறுகிறார்களோ அதுபோல, நீயும் நான் செய்யாத குறைகளைச் செய்ததாக, என் முன்னால் இல்லாமல், எங்கேயோ இருந்துகொண்டு சொல்லுகிறாய்! என்மீது சினந்துகொள்ளாதே! உன் கட்டளையை ஏற்று நடப்பதல்லாமல், இங்கே, உன் கட்ட

ளேயை மீறி யார் நடந்தார்கள்? சொல்?" என்று தலைவியைக் கேட்கிறான்.

"நீ, நெஞ்சிலே கொஞ்சம்கூட நடுக்க மில்லாமல், எனக்கு வஞ்சனையை இழைத் ததோடல்லாமல், என் அருமை மகன்மீது சிறிதுகூட ஆசையையும் நினையாமல் என் முன்னே வந்து நிற்கிறாய்! பரத்தையின், நகைகள் விளங்குகின்ற மார்போடே, நீ சேர்ந்து அணைந்ததால், அவள் முடியிலிருந்து உதிர்ந்த பூவிதழ்கள் தாம் இன்னமும் உன் ஆடையை விட்டு அகலவில்லையே! அவை, தாமே, எனக்குத் தெரியாமல் அகன்றுவிடட் டும் என்பதை எண்ணித் தானே, காற்று வீசுவதற்கு எதிரே நின்று கொண்டிருக் கிறாய்! உன்னுடைய குற்றத்தை விளக்க இந்தப் பூவிதழ்களே போதுமே! இப்படி இங்கே நிற்காதே! போய்விடு!" என்று சினந்து கூறுகிறாள் தலைவி.

"இனிமேல், நான் இப்படிப்பட்ட குற்றத்தைச் செய்யமாட்டேன்! பொருத் தருள்!" என்று உறுதிமொழிக் கூறித் தலைவி யைக் கெஞ்சுகிறான் தலைவன்.

தலைவி ஏதும் பதில் கூறாமல், சினங் கொண்டவளாய் அப்படியே நிற்கிறாள்.

அதனைக் கண்ட தலைவன், "நான் உறுதி மொழி கூறிய பிறகும், நீ என்னிடத்துக் கொண்ட சினத்தை மாற்றிக்கொள்ளவில்லை யாயின், கன்று கட்டியிருக்கும் இடம் நோக் கிப் பசு செல்வதைப்போல், நான் நீயே என்னிடம் வரும்படி என் தந்தையின் பெய ரைக்கொண்ட மகனை எடுத்துக்கொள்வேன்" என்று கூறுகிறான்.

தலைவன் மகனைக் கைநீட்டி வாங்கு கிறான்; மகனை அவனிடத்தில் கொடுக்கா விட்டால் அவன் இறந்துவிடுவானோ என்று அஞ்சி, தலைவியும் மகனைக் கொடுக்கிறாள். அவ்வளவில் அவள் ஊடல் தீருகிறாள்.

இல்லற வாழ்க்கை இனிது நடைபெறு கிறது!

ஃ ஃ ஃ

கலித்தொகையில் **மருதனிளநாகனார்** என்ற புலவர் பாடிய மருதக்கலியின் 16-வது பாட்டின் கருத்துதான் மேலே தீட்டிக் காட்டப்பட்டிருப்பதாகும். ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் ஊடலும் பின் கூடலும் ஆகிய காதல் நிகழ்ச்சி எவ்வாறு நிகழ்கிறது என்ப தைப் புலவர் கற்பனை செய்துகாட்டும் திறன் இச்செய்யுளில் சிறந்து விளங்குவதைக் காண லாம். தம் மனதை அடக்கத்தெரியாது, பொதுப் பெண்டிர்களின்மீது அலையவிடும் தன்மையைக் கொண்ட ஆடவர்களுக்கு எடுத்துக்காட்டாக ஒரு தலைவனையும், நிறை காத்து ஓம்பி இல்லறத்தைச் செவ்வனே இயற்றிவரும் நற்பெண்டிற்கு எடுத்துக்காட் டாக ஒரு தலைவியையும் இச்செய்யுளின் மூலம் எடுத்துக்காட்டித், தலைவனைத் திருத்த வேண்டிய தலைவியது கடமையையும், தன் குற்றத்தையுணர்ந்து, திருந்தி, இல்லறத்தை ஏற்று, ஒழுங்காக நடத்தவேண்டிய தலைவ னது கடமையையும் புலவர் இங்கே வற்புறுத்தியுள்ளார். உலகில் இயற்கையாய் நிகழக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளில் ஒன் றினை எடுத்துக்கொண்டு, உயர்வும் நயமும் தோன்ற ஓவியமாக்கிக் காட்டுவதைப் புலவர் தம் குறிக்கோளாகக் கொண்டுள் ளார். இவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் வாழ்ந்த புலவராவார். இவரை **மதுரை மருதனிளநாகன்** என்றும் அழைப் பார்கள். மருதம் பற்றிய பாடல்களை இயற்றுவதில் வல்லவராக இருந்ததால், **மருதன்** என்ற அடைமொழி கொடுக்கப் பட்டு அழைக்கப்பட்டார். ஃ

வரவேற்கிறோம்!

சிறந்த சிறிய தரமான சிறுகதைகளையும், சுவையான இலக்கிய கட்டுரைகளையும்,

சூடான, சுவையான அரசியல் விமர்சனங் களையும், கட்டுரைகளையும் பெரிதும் வரவேற்கி றோம்.

அரசியல் விளக்கங்கள், விமர்சனங்களா யின் அந்தந்த வார புதன்கிழமைக்குள் அலுவலகத்திற்குக் கிடைக்க வேண்டும்.

ஆசிரியர்,
"காஞ்சி"

சிறுகதை :

பிராயசித்தம்

வல்லம் மணியன்

சரோஜா மறைந்து இன்றோடு முப்பது நாட்கள் ஆகிறது! கன்னியப்பனுக்கு அவளோடு வாழ்ந்த வாழ்க்கை ஒரு கனவாகவே இருந்தது! அவளை மணந்து—அவளோடு கொஞ்சிக் குலவி வாழ்க்கை நடத்தியது—பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தது எல்லாம் ஏதோ வெண்பனி மூட்டத்திற்கு இடையே நடந்த கனவுபோல் அவனுக்குத் தோன்றியது! சில சமயங்களில் அவனது கடந்தகால வாழ்க்கையை 'ஒரு பிரம்மை' என்றே எண்ணினான்! ஆனால் குழந்தை சாந்தியைப் பார்க்கின்றபோது தான் 'தன்னுடைய பிரம்மை' ஒருபொய் என்று உணர ஆரம்பித்தான்!

'அஜீஸ்பாய் சைக்கிள்' என்றாலே ஒரு காத தூரம் ஓடும் கன்னியப்பன்—இன்று வாடகை குறைவு என்பதால் 'பால்கேனை' பின்னால் கட்டிக்கொண்டு வீதிகளிலே சென்றுக்கொண்டிருக்கிறான். அந்த சைக்கிளின் ஒவ்வொரு பகுதிகளிலிருந்து விதவிதமான சத்தம் வந்துக் கொண்டிருந்தது.

வேதனையே உருவெடுத்த கன்னியப்பனை —சரோஜாவின் பிரிவு இந்த முப்பது நாட்களுக்குள் அவனது உடம்பை பாதியாக கரைத்து விட்டிருந்தாலும் ஏதோ ஒரு உணர்ச்சி அவனுடலுக்கு மித மிஞ்சியது சக்தியை அளித்திருந்தது. இல்லை என்றால், இந்த சைக்கிளை அவனால் மிதிக்க முடியுமா?

வீடு வீடாக பால் ஊற்றிக்கொண்டு சென்ற கன்னியப்பனின் கண்கள்—ஆலமரத்துக்கு பக்கத்திலிருந்த இடிந்துபோன சாவடியைக் கண்டன. அதைக்கண்டதும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வந்தது. 'தன்னுடைய வேதனையான வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்தது இந்த சாவடிதான்' என்று நினைக்கும்போது அவனுக்கு துக்கம் தொண்டைக் குழியை அடைத்தது!

கன்னியப்பன் கடந்தகால நினைவலைகளில் மூழ்கிக்கொண்டிருந்தான்!

ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கன்னியப்பன் சரோஜாவை கைப் பிடித்தான். சரோஜா முதன் முதலாக கன்னியப்பன் வீட்டிற்கு வலதுகாலை வைத்த போது 'மகாலட்சுமி' போலிருந்தாள்! அவளது மாமியாரும் சரோஜாவை 'லட்சுமி' என்றே அழைத்தாள்! வாழ்க்கை சக்கரம் மணம் முடிந்த ஓராண்டு காலம்வரை நன்றாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. 'மறு ஆண்டு மகனையும்—மருமகளையும் விட்டு மறைந்து விட்டாள்.

தந்தை இறந்த பிறகு தயாரின் அரவணைப்பில் செல்வமாக வளர்ந்த கன்னியப்பன்—தனது தாயின் பிரிவை மறக்கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். இந்த நிலையில்தான் 'வில்வம்' அவனுக்கு அறிமுகமானான். அன்றே 'ராஜாவும்—ராணியும்' 'மில்லியும்' கன்னியப்பனுக்கு நிரந்தரமான நண்பர்களாகி விட்டாக்கள்!

கன்னியப்பனுக்கு எல்லாம் 'அந்த ஆலமரத்து சாவடிதான். தாயின் பிரிவை மறக்க குடிக்க ஆரம்பித்தவன்—கைப் பிடித்தவளை மறக்கவேண்டிய சூழ்நிலைக்கு உருவானான். பால் பொங்கிக் கொண்டிருந்த அவன் வாழ்வில் புயல் வீசியது. வீடு, இரண்டு பசுமாடுகள்-சைக்கிள்—'பால்கேன்' போன்ற தனது தொழிற் கருவிகள்—சரோஜாவின் நகைகள் எல்லாம் சேட்டுக் கடைக்கு கை மாறியது!

கன்னியப்பன் வீட்டுக்கு வருவதும் குறைந்து விட்டது! கணவன்' என்ற உரிமையில் அவனை திருத்த நினைத்தபோது அவளுக்கு கிடைத்த பரிசு அடியும் உதையும் தான். இப்படியே இரண்டாண்டுகள் கழிந்துவிட்டது! தாயாரின் பிரிவுக்கு ஆரம்பித்த 'குடி' சரோஜாவின் உயிருக்கே உலைவைக்க ஆரம்பித்து விட்டது.

மயக்கத்தில் சம்பாதிக்க நினைத்த கன்னியப்பனுக்கு 'லட்சுமியின் கடாட்சம் கிட்டிவிடுமா என்ன! 'சட்டைப்பை' காலியாகிற போதுதான் கன்னியப்பனுக்கு சரோஜாவின் நினைவுவரும்! அது அவனது சட்டைப்பையை நிரப்பத்தான்!

நினைவிழந்த மனத்தோடும் செயலிழந்த கால்களோடும் வீடு வந்து சேர்வான் கன்னியப்பன். சரோஜா வேர்வைநீர் மண்ணில்பட உழைத்துவைத்த காசுகளை

எடுத்துக்கொண்டு போய்விடுவான். பாவம் சரோஜா! கணவன் வார்த்தை தட்டியரியாதவள். பயந்த சுபாவமும்—கணவனின் மேல் பக்தியும் கொண்டவள்.

ஆறுமாத வீட்டுவாடகை கட்டாமல் விட்டுவிட்டதால் சரோஜாவிடம் வீட்டை விட்டு போகும்படி பொறிந்துவிட்டு போயிருந்தாள். வீட்டுக்காரி அதற்காக சரோஜா இரண்டு வாரங்களாக கால்வயிறு கஞ்சி குடித்து கூலிவேலை செய்து அந்த பாக்கியை அடைத்தாள். அந்த சோர்வு அவளை உடம்பில் ஜிவன் இல்லாமல் மூலையில் படுக்கச்செய்து விட்டது.

சரோஜா இறப்பதற்கு ஒரு வராரத்திற்கு முன்பு, கன்னியப்பன் இருந்ததை எல்லாம் சாவடியில் தோற்றுவிட்டு—வெறுப்பால் அளவைவிட அதிகமாக கடன் வாங்கி குடித்துவிட்டு தெளிவில்லாத நிலையில் மனைவியை பார்க்கவந்தான்.

"சரோஜர! ஏய் சரோஜா! எங்கடி இருக்கிற கதவைத் திறடி" என்று கதவைத் தட்டினான். கணவன் ஒரு மாதத்திற்கு பிறகுதான் வீட்டிற்கு வருகிறான் என்பதை உணர்ந்த சரோஜா மெல்ல எழுந்து கதவைத் திறந்தாள்.

"சரோஜா பசிக்குது சாப்பாடு இருந்தா போடுடி! என்றான் அவன்-இருந்த கஞ்சியை ஊற்றி பச்சைமிளகாயைக் கொடுத்தாள்.

"ஏண்டி! இந்த கஞ்சிதான் இருக்குதா-வேற ஒண்ணுமில்லையா? இந்தா இத நீயே குடி" என்றவன் கலயத்தை தூர வீசி எறிந்தான்.

அந்த கஞ்சிகூட இல்லாமல் அவள் இத்தனை நாட்கள் கஷ்டப்பட்டது அவனுக்கு எங்கே தெரியப்போகிறது. எலும்பும் தோலுமாக ஒடுங்கிப் போயிருந்த சரோஜா விம்மிவிம்மி அழுதுக்கொண்டிருந்தாள்!

"ஏய்! சும்மா ஒப்பாரி வெச்சிக்கினு இருக்காதே! ஏண்டி ஏதாச்சும் பணமிருந்தா குடேன்—நாளைக்கி திருப்பிக் கொடுத்திடறேன்" என்றான் கன்னியப்பன்.

"என்கிட்டே பணம் ஏதுங்க! ரெண்டு வாரமா கூலிவேலை செஞ்சி ஆறுமாச வீட்டு வாடகைய கட்டியிருக்கேன். அந்த பாக்கிய நான் கட்டாம போயிருந்தா—நானும் எம்பொண்ணும் நடுத் தெருவிலத்தான் நின்னு இருக்கனும். என் கஷ்டம் உங்களுக்கு எங்க தெரியப்போவுது." என்றாள் சரோஜா.

"சரிதான் சும்மா இருடி! சுயபுராணம் பாடாதே! ஏதினுச்சும் நகை இருந்தா குடேன்டி!"

"ஏங்க, எந்த நகையங்க என்கிட்ட விட்டு வெச்சிருக்கீங்க...எல்லா நகையத்தான் வெச்சி தீத்தாச்சே! வேற எந்த நகை இருக்கு தர்றதுக்கு" என்றாள் சரோஜா.

"ஆமாம்! உங்க அப்பன் வூட்டு நகையத் தானே எனக்கு கொடுத்தே! போடி தரித்திரம் புடிச்ச அனுத!" என்று வசை மாரிப் பொழிந்தான் கன்னியப்பன்.

என்னதான் கணவன் மோசமானவனுக இருந்தாலும்சரி கணவன் மனைவி' இருவருக்குள் பிணக்கு இருந்தாலும்சரி—இந்த இரவு நேரந்தான் பெரும்பாலும் அவர்களை ஒன்று சேர்த்துவைக்கிறது. பாயில் படுத்துக் கொண்டிருந்த கன்னியப்பன்—பக்கத்திலிருந்த சரோஜாவைப் பார்த்து...

"சரோஜா...சரோஜா..."என்று மெல்ல முனங்கினான்.

"உம்" என்றாள் சரோஜா. அவள் குரலில் ஜீவனில்லை.

"இப்படி கிட்டவாயேன்" என்றான் அவன்.

அவள் சற்று நகர்ந்து படுக்கும் ஒலி மெல்ல கேட்கிறது!

"எம்மேல கோபமா" என்றான் அவன். மௌனமே—அவனுக்கு பதிலாக அமைகிறது. சிறிது நேரத்திற்கு பிறகு அவனது கரங்களில் தாலி தட்டுப்படுகிறது. அதன் கீழ்முனையில் கால் சவரன் பொன்தாலி! சட்டென்று எழுந்தான் கன்னியப்பன் கோபமாக—

"ஏண்டி திருடி! நான் நகை கேட்டதுக்கு வெச்சுக்கினே—ஒண்ணுமே இல்லேண்ணு சொல்லிட்டியா! எம்பேச்சிக்கு அவ்வளவு மரியாத இல்லாம போயிடிச்சா! ஏண்டி கொடுத்திருந்தா சாவடிக்கி போயிருக்க மாட்டேன்டி? அடிதரித்திரம் புடிச்சவளே தாலியை கழட்டிக் குடுடி!" என்றான்.

"வேண்டாங்க! மிஞ்சி என் உடம்புல மறைவா நிக்கிறது இது ஒண்ணு தாங்க! தயவுசெஞ்சி இதமட்டும் கேக்காதிங்க..." என்றாள் சரோஜா...

ஏண்டி! உங்கப்பன்வூட்டு சொத்தையா கேக்கறேன்—அது நான் போட்டதுடி! எனக்கு அவசரத்துக்கு உதவாதது உன் கழுத்தில எதுக்கிடி இருக்கனும்...மரியாயையா கழட்டி குடுத்துடு...என் கோவத்த கிளார்ன உன்ன பொளந்துடுவேன்" என்று கோபமாக பேசினான்.

"ஏங்க! நமக்கு கல்யாணம் ஆகி மூணு வருஷம் ஆயிடிச்சி! நான் இதுவரையிலும் எனக்கண்ணு எதுவும் உங்ககிட்ட கேட்டது

இல்ல...நீங்களும் இதுவரையிலும் மனைவிக்கின்னு எதுவும் வாங்கிக் கொடுத்ததும் இல்ல...ஆனு இன்னிக்கித்தான் உங்ககிட்ட மனசு திறந்து கேக்கறேன். தயவுசெஞ்சி இந்த தாலியை மட்டும் கேக்காதிங்க..."

"இத பார் சரோஜா! இன்னிக்கி மட்டும் இத கொடு வெச்சி கடைசியா ஆடிட்டு வந்திடறேன். கண்டிப்பா ஜெயிச்சிக்கினு வந்து நாளைக்குள்ளாற திருப்பி வாங்கிக்கினு வந்து உன் கிட்ட கொடுத்திடறேன்..."

"ஏங்க, நீங்க எப்பதான் ஜெயிச்சிருக்கிறீங்க! இப்படி சொல்லிச் சொல்லித்தான் எல்லாத்தையும் அழிச்சிட்டிங்க! வாங்கிக்கிட்டு போனு போனது போனதுதான்! இன்னென்னு உங்ககிட்ட சொல்லிடனும்னு இருக்கேன்...போனவாரத்தில இருந்து என்னுல எழுந்து நடக்க முடியல என்னுல முன்னபோல பேசறதுக்கும் முடியல...எம் பொண்ண எங்க நிராதரவா விட்டுட்டு போயிடுவேண்ணு எனக்கே பயம்மா இருக்கு. நான் சக்கை ஆயிட்டேங்க! சக்கை ஆயிட்டேன். இன்னும் கொஞ்ச நாளைக்குள்ள உங்கள விட்டு போனுலும் போயிடுவேன். இப்போ என் உசுரு மேல எனக்கு நம்பிக்கை இல்லீங்க...—"அதனுல... நான் சாகறப்போ நீங்க எனக்கு கட்டிய தாலியோட போகனும்னு நான் ஆசைப் படறேன். தயவு செஞ்சி நான் சாகற தருவாயில என் ஆசையை நிறைவேத்தி வையுங்க..." என்றுள் சரோஜா. உண்மையில் அவளுக்கு மூச்சுவாங்கியது. அவள் உணர்ந்து சொன்ன வார்த்தைகள் அவன் காதுக்கு எட்டவில்லை.

"ஏண்டி, நீ இருந்தா என்ன! செத்தா என்ன! தாலியை கழட்டிகுடுடி" என்றவன் அந்த இரவில் சரோஜாவின் கழுத்திலிருந்த தாலிக்கயிறை அறுத்து-அதிலிருந்த 'பொன் தாலியை' கழட்டிக்கொண்டு போய் விட்டான்.

"வேண்டாங்க! வேண்டாங்க..." என்று கதறிய சரோஜா வேரற்ற மரம்போல மண்ணில் சாய்ந்தாள்.

அன்று சரோஜாவை கடைசியாக பார்த்தவன்தான். இரண்டு நாட்கள் கழித்து ஆலமரத்து சாவடிக்கு ஒரு பையன் ஓடிவந்தான்.

"மாமா! மாமா! அக்கா செத்து போயிடிச்சி மாமா! அக்கா—செத்து போயிடிச்சி" என்றுன் அந்த பையன்.

ஒரு கணம் கன்னியப்பன் அசந்து நின்று விட்டான்! கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பதுபோல் கன்னியப்பன் கதறினுன்—துடித்தான். பாலைவனத்து தனிமரமாக நின்றுன். உலகமே அவனை நிராதரவாக விட்டுவிட்டது போல் தோன்றியது.

அன்று கன்னியப்பனிடம் அவள் கெஞ்சிக்கேட்ட வார்த்தைகள் அவன் நினைவுக்கு வந்தது.

"நான் சாகறப்போ நீங்க எனக்கு கட்டிய தாலியோட போகனுன்னு நான் ஆசைப்படறேன்—தயவு செஞ்சி என் ஆசையை நிறைவேத்தி வையுங்க..." என்று மன்றுடிக்கேட்ட வார்த்தைகள் அவன் காதில் லட்சோபலட்ச முறைகள் ஒலித்துக் கொண்டிருந்தது. சரோஜாவின் உயிரற்ற உடலை கட்டிப் பிடித்துக் கொண்டு 'ஹோ' வென்று அழுதான்!

திடிரென்று கண்களைத் துடைத்துக் கொண்ட கன்னியப்பன் நேராக 'சேட்டுக்' கடைக்குச் சென்றுன்.

"சேட்டு! எத்தனை தடவை உன்கிட்ட நகை வெச்சிருக்கேன்! மாசம் ஆறுன்னுலும்-வருஷம்னு சொன்னுலும்—அசலும் வட்டியையும், நீபோட்ட கணக்கு எப்படின்னு கூட கேக்காம, உனக்கு பணம் கட்டி இருக்கேன்! நான் உனக்கு புது ஆளா? சேட்டு! நான் ஊர்ல நாணயம் தவறினவனு இருக்கலாம்! ஆனு உன்கிட்ட நாணயம் தவறி நடந்திருக்கேனு? நான் ஒண்ணும் உன்ன நூறு — ரெண்டுநூறு கேக்கல...எழுபது ரூபாய்க்கு வெச்ச தாலியைத்தான் கேக்கறேன்...சேட்டு! உன்ன நான் தர்மம் பண்ணச் சொல்லல...கடனுத்தான் கேக்கறேன்...சேட்டு! எம்பொண்டாட்டி ஆசைய நிறைவேத்த—எனக்கு அந்த தாலிய கொடு! இன்னும் ரெண்டு நாள்ல திரும்பித் தந்திடுறேன்!" என்று கொஞ்சிக் கேட்டான் கன்னியப்பன்.

"என்னய்யா இது! காலங் காத்தால படாரோதனையா போச்சு! இதபாரு கன்னிப்பா! நம்ப கிட்ட கடன் வியாபாரம் எல்லாம் வேண்டாம்—துட்ட குடுத்துட்டு தாலியை வாங்கிக்க..." என்று கூறி விட்டார் சேட்டு.

கன்னியப்பன் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினுன். எந்த சாவடி. எந்த சேட்டுக் கடை தன் மனைவியின் உயிருக்கு எமனுக அமைந்ததோ அந்த இடத்திற்கு செல்வதும் —வருவதும் இதுதான் கடைசிமுறை என்று தீர்மானித்துக் கொண்டான். தனக்கென்று வாழ்ந்த சரோஜா தன்னுலேயே சீரழிக்கப் பட்டால் என்பதை நினைக்கும்போது

தயாராகிறது!

‘காஞ்சி’

கலைஞர் பொன்விழா மலர்.

பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றல்
கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களின்
புகழ்மணம் பரப்பும் நன்மலர்,
இப் பொன்மலர்!

முன்னணித் தலைவர்கள்
முற்போக்கு எழுத்தாளர்கள்
ஆகியோரது அரிய படைப்புக்களுடன்
மூவண்ண முகப்போடு சூன் திங்களில் வெளிவருகிறது!

தேவைக்கு உடன் தொடர்பு கொள்க:-

—மேலாளர் “**காஞ்சி**”
காஞ்சிபுரம் 631503.

இதயமே வெடித்துவிடும் இருந்தது கூனி குறுகி வீட்டிற்கு வந்த கன்னியப்பனை:-

“அப்மா...அம்மா...அம்மா”— என்று தன் தாயை கேட்டுக்கொண்டு அவனது கால்களை கட்டிப்பிடித்துக் கொண்டாள். தான்பெற்ற மகள் இருப்பதையே அப்போது தான் உணர்ந்தான் கன்னியப்பன். ‘இனி நாம், தனிமரமில்லை – நமக்கும் கீழே ஒரு கன்று வளர்த்துக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணியபோது—ஏதோ ஒரு ‘ருசிப்பு’ இருந்தது.

சாந்தியை மார்பில் புதைத்துக் கொண்டவன்—கண்களைத் துடைத்துக் கொண்டு— சரோஜாவின் உடலுக்கருகே வந்து உட்கார்ந்தான்.

அம்மா சரோஜா! என்ன மன்னிச்சிடும்மா! உன்னுடைய ஆசைய நிறைவேத்தாமே பண்ணிட்ட துரோகி நான்! என்ன மன்னிச்சிடு சரோஜா! மன்னிச்சிடு! நீ என்ன விட்டு பிரிஞ்சதுக்கு அப்புறம்தான் நான் என்னுடைய கேவலமான செய்கையை உணர ஆரம்பிச்சேன்! உம்மேல ஆணையா, இனிமே அந்த பக்கமே தலைகாட்ட மாட்டேன் சரோஜா! தலைகாட்ட மாட்டேன்!

அம்மா சரோஜா! பொன் தாலியைத் தான் உன் கழுத்தில போட்டு உன் ஆசைய என்னால நிறைவேத்த முடியல...ஆனா பத்து பைசா குடுத்து மஞ்சள் கூடவா என்னால வாங்கி—உன் தாலிக் கயித்தில கட்டிவெச்சி —உன்ன பூவோட பொட்டோட அனுப்ப முடியாதுன்னு நினைச்சே!” அன்று அழுத கன்னியப்பன் மஞ்சள் துண்டை தாலிக் கயிற்றில் கட்டி அவள் கழுத்தில் கட்டினான்.

சரோஜா! உன்னுடைய பிரதிபலிப்பு சாந்தி இல்லேன்னா நானும் நீபோன உலகத்துக்கே வந்திட்டு இருப்பேன்! சரோஜா எந்த ‘மாங்கல்யம்’ உனக்கு கெடைக்காம செஞ்சிட்டேனே அந்த ‘மாங்கல்யம்’ நம்ம மகள் சாந்திக்கு கிடைச்சு அவள் நீடுடி வாழும்வரை நான் ஓயமாட்டேன்...இது உம்மேல சத்தியம்”—என்று சபதம் எடுத்துக்கொண்ட கன்னியப்பன்... சரோஜாவை வாரி அடக்கம் செய்து விட்டான்.

‘தவறு செய்தவர்கள் திருந்துகிறார்கள். பலர் தான் செய்த தவறுக்கு பிராயசித்தம் செய்கிறார்கள். திருந்துபவர்களைவிட பிராயசித்தம் செய்பவர்கள் ஒருசிலர்தான்’

'குட்டிக் கதைகள் ஒரு நூறு!'

—புலவர் அரிமதிதென்னகன்

54. உபதேசம்

தேர்தல் நேரம்!!

"பணம் கொடுப்பார்கள்; வாங்கிக் கொள்ளுங்கள்! ஆனால், 'ஓட்டை' மட்டும் எனக்கே போடுங்கள்!!

இப்படி, இரண்டு வேட்பாளர்களும் பிரச்சாரம் செய்தனர்.

ஒரு வேட்பாளரின் மனைவியே, மற்றொரு வேட்பாளருக்கு வாக்களித்தார்!!

மற்றொரு வேட்பாளரின் மனைவியோ, இருவருக்குமே வாக்களிக்கவில்லை!!

பணம் கொடுக்காத மூன்றாவது வேட்பாளர் இருந்திருந்தால்,

ஒருவேளை,

அம்மையார் அவருக்கு வாக்களித்திருப்பார்!!

55. பக்தி

அவர் ஒரு கோடீஸ்வர பக்தர்,

கோடிக்கணக்கான தன் சொத்து,

தெய்வ காரியங்களுக்கே பயன்பட வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

எனவே

உறவினர்களாக இருந்த நாத்திகர்களுக்குத் தன் சொத்தை உரிமையாக்க விரும்பவில்லை.

அதற்காக,

நாடெல்லாம் தேடி,

ஒரு பக்தனைக் கண்டு பிடித்துத் தன் சொத்துக்களையெல்லாம் ஒப்படைத்து உயிரையும் விட்டு விட்டார்.

பாவம்!

பக்தன் பணக்காரனாக ஆனான்!

பணக்காரன் பரமனை மறந்து விட்டான்.

நாத்திகனுக்கு மட்டும் அந்தப் பணம் கிடைத்திருந்தால்...?

நாராயணா! நாராயணா!

56. வாய்மையா வெல்லும்?

அவர் ஒரு கதாசிரியர்.

படத்தயாரிப்பாளர் ஒருவரிடம் தான் எழுதிய கதையை உருக்கமாகப் படித்துக் காட்டினார்.

கதையின் தலைப்பு:-

"வாய்மையே வெல்லும்"

கதையையும், தலைப்பையும் கேட்ட படத்தயாரிப்பாளர் கீழ்வருமாறு சொன்னார்-

"மக்களுக்கு வாழவழி சொல்லாமல் சாகவா வழி சொல்வாங்க?"

மக்களை உருப்படாமல் செய்யும் கதைகளை நான் எப்போதுமே படமாக்குவதில்லை."

தயாரிப்பாளரின் அனுபவம் கதாசிரியருக்கு என்றாவது ஒரு நாள் புரிந்தே தீரும்!!

57. வழக்கம்

அவள் நடிகை! ஆம்! கவர்ச்சிக்கன்னி!!

அவன் நடிகன்! ஆம்! காதல் மன்னன்!!

கவர்ச்சிக்கன்னிக்கும் காதல் மன்னனுக்கும் திருமணம் நடைபெற்றது.

அன்றே முதலிரவு!!

அவன்,

அவளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளும் வந்தாள்!!

விளக்கிற்குத் தூக்கம் வந்தது.

இருவரும் விழித்திருந்தனர்!!

நேரம் சென்றது.

விளக்கு விழித்துக் கொண்டது.

அவன்,

அவளிடம் ஐயாயிரம் ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தான்.

அவள்,

எண்ணிப் பார்த்து,

அவனிடமே

இரண்டாயிரம் ரூபாயைத் திருப்பிக்கொடுத்து விட்டாள் நாணயமாக.

விளக்கு வெட்கப்பட்டது.

★

வண்ணத்துப் பூச்சியின் வண்ணமிகு கோலங்கள்!

- ★ அசல் காஞ்சிபுரம்,
- ★ கும்பகோணம் மற்றும்
- ★ ஆரணி பட்டுப் புடவைகள்

நேர்த்தியான கைத்தறி பருத்திப் புடவைகள் ● வேட்டிகள் லுங்கிகள் ● துண்டுகள் ● கைக்குட்டைகள் ● வீட்டு அலங்காரத் துணி வகைகள், வண்ணத்துப் பூச்சியின் நெசவுகளே நவநாகரீகங்கள்!

வண்ணத்துப் பூச்சியின் கிளாசிக் ரெடிமேட் ஷர்டுகள் ✲ கவர்ச்சியான பட்டுடைகள் ✲ எல்லா வயதினரும் விரும்பும் நவீனங்கள்.

கைத்தறியே வண்ணத்துப் பூச்சி!

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்

நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

பன்னிரண்டு ஆண்டுகளில்
வருவாய் இரட்டிப்பாகிட
தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3.
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.